# தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 21

## நிதிநிலை செயலாக்கம்

## 2021–2022

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு

# I. நெடுஞ்சாலைத்துறை

## 1. முன்னுரை

சாலைகள் இந்திய பொருளாதாரத்தின் தமனியாகவும் வர்த்தகத்தின் உயிர்நாடியாகவும் செயல்படுகின்றன. 85% பயணியர் போக்குவரத்தையும் 70% சரக்கு போக்குவரத்தையும் வழங்குவதன் மூலம் ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. விரைவான தொழில்துறை வளர்ச்சிக்கு போதுமான மற்றும் தரமான உள்கட்டமைப்பு அமையப்பெறுவது அவசியம், இதனால் மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகி சமூக மேம்பாட்டிற்கு ஏதுவாகிறது. ஒரு மாநிலத்தின் நம்பகமான, பாதுகாப்பான மற்றும் சமூக நலனை ஏற்படுத்த உட்கட்டமைப்புக் வசதிகளான உயர்மட்டப் பாலங்கள், இரயில்வே சாலை மேம்பாலங்கள் (ROB)/ இரயில்வே சாலை கீழ் பாலங்கள் (RUB), சாலை மேம்பாலங்கள், உயர்மட்ட சாலை வழித்தடங்கள், புறவழிச்சாலைகள் மற்றும் வட்டச்சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் நெடுஞ்சாலைத்துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அதிகரித்து வரும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் போக்குவரத்து செறிவு போன்ற காரணங்களால் சாலைகளின் மேற்பரப்பு சேதமுறுவதால் சாலைகள் மற்றும் பாலங்களை ஐ.ஆர்.சி (IRC) விதிமுறைகளின் படி பராமரிப்பது சீரான போக்குவரத்தை உறுதி செய்ய அவசியமாகிறது. இதனால், புதிய கட்டமைப்பினை உருவாக்கும் செலவு குறைவதுடன் ஆயுட்காலமும் அதிகரிக்கப்படுகிறது. மேலும் மாநிலத்தின் சொத்து மதிப்பும் அதிகரிக்கிறது.

இத்துறையின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு.

## 1.1. நெடுஞ்சாலைத்துறை மூலம் பராமரிக்கப்படும் சொத்துக்கள்

நெடுஞ்சாலைத்துறை 70562 கி.மீ. நீளச்சாலைகளைப் பராமரித்து வருகிறது. சாலைகளின் வகைப்பாடு, அவற்றின் நீளம் மற்றும் பாலங்களின் விவரங்கள் முறையே அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2–ல் விவரிக்கப்பட்டுள்ளது. சாலைகளின் மேற்தளப்பரப்பு வாரியாக உள்ள நீளம் மற்றும் வழித்தடம் வாரியாக உள்ள நீளம் அட்டவணை 3 மற்றும் அட்டவணை 4–ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: சாலைகளின் வகைப்பாடு**

(நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | | நீளம் |
|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ) | மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் பராமரிப்பின் கீழ் | 1511 |
| | | இந்திய தேசிய நெஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பின் கீழ் | 5095 |
| | | தேசிய நெடுஞ்சாலைகள் மொத்தம் | 6606 |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ) | | 11279 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் (மா.மு.சா) | | 11625 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் (மா.இ.சா) | | 41052 |
| | சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ. தவிர) | | 63956 |
| | **ஒட்டு மொத்தம்** | | **70562** |

**அட்டவணை 2: பாலங்களின் வகைகள் மற்றும் அவற்றின் எண்ணிக்கைகள்**

| வ. எண் | பாலங்களின் வகைகள் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | பெரிய பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள்* | 9179 |
| 2 | மிகச் சிறு பாலங்கள் | 126318 |
| 3 | இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே மேம்பாலங்கள் | 136 |
| 4 | இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே கீழ்பாலங்கள் | 58 |
| 5 | பாதசாரிகள் சுரங்கப்பாதைகள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் | 15 |
| 6 | சாலை மேம்பாலங்கள் | 72 |
| | **மொத்தம்** | **135778** |

* பாலங்களில் 6 – 60 மீ. மற்றும் 60 மீ. க்கு மேல் நீர்வழிப்பாதை உள்ளவை அடங்கலாக

**அட்டவணை 3: சாலை மேற்தளப் பரப்பின் நீள விவரங்கள்**

(நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | சிமெண்ட் கற்கலவைத் தளம் | தார்த் தளம் | கப்பித் தளம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் | 29 | 6577 | – | 6606 |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் | 28 | 11251 | – | 11279 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் | 31 | 11594 | – | 11625 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் | 110 | 40942 | – | 41052 |
| **மொத்தம்** | | **198** | **70364** | **–** | **70562** |

**அட்டவணை 4: சாலை வழித்தடங்களின் நீள விவரங்கள்**

(நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | ஒரு வழித் தடம் | இடை வழித் தடம் | இரு வழித் தடம் | கடின புருவங்களுடன் கூடிய இரண்டு வழித் தடம் | நான்கு வழித் தடம் | ஆறு வழித் தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **தேசிய நெடுஞ்சாலைகள்** | – | – | **1892** | **2127** | **2263** | **324** | **6606** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | – | – | 29.00% | 32.19% | 34.25% | 5.00% | |
| 2 | **மாநில நெடுஞ்சாலைகள்** | **33** | **207** | **7961** | **1830** | **1017** | **231** | **11279** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 0.29% | 1.84% | 70.58% | 16.22% | 9.02% | 2.05% | |
| 3 | **மாவட்ட முக்கிய சாலைகள்** | **315** | **6243** | **4669** | **294** | **101** | **3** | **11625** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 2.71% | 53.70% | 40.17% | 2.53% | 0.86% | 0.03% | |
| 4 | **மாவட்ட இதர சாலைகள்** | **33066** | **6567** | **1331** | **76** | **12** | **0** | **41052** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | **80.55%** | **16.00%** | **3.24%** | **0.18%** | **0.03%** | **0%** | |
| | **மொத்தம்** | **33414** | **13017** | **15853** | **4327** | **3393** | **558** | **70562** |
| | **சாலைகளின் மொத்த நீளத்தில் வழித்தடத்தின் விழுக்காடு** | **47.35%** | **18.45%** | **22.47%** | **6.13%** | **4..81%** | **0.79%** | |

## 1.2. திட்டங்களின் செயல்பாடு

### 1.2.1. நிதி செயல்பாடு

2021–22 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளின் நிதி நிலை செயலாக்கம், மற்றும் 2022–23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு அட்டவணை 5 இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5: நிதி நிலை செயலாக்கம்**

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு** | | | |
| | **மாநில நெடுஞ்சாலைகள்** | | | |
| 1 | பாலங்கள் (மூலப் பணிகள்)–JA | 977.00 | 2255.18 | 477.01 |
| 2 | சாலைகள் (நில எடுப்பு)–JA | 0.01 | 0.00 | 0.00 |
| 3 | 416 பெரும் பணிகள் –JF | 100.00 | 93.70 | 150.00 |
| | **மொத்தம்** | **1077.01** | **2348.88** | **627.02** |
| | **மாவட்ட முக்கிய சாலைகள்** | | | |
| 4 | 416 பெரும் பணிகள்–JG | 100.00 | 87.17 | 150.00 |
| | **மாவட்ட இதர சாலைகள்** | | | |
| 5 | 416 பெரும் பணிகள்–JH | 100.00 | 97.13 | 150.00 |
| | **பழுதடைந்த பாலங்களை மறுசீரமைத்தல்** | | | |
| 6 | பழுதடைந்த பாலங்களை மறுசீரமைத்தல் –JJ | 0.01 | 0.00 | 0.01 |
| 7 | 416 பெரும் பணிகள்–JB | 100.00 | 89.73 | 150.00 |
| | **மொத்தம்** | **100.01** | **89.73** | **150.01** |
| | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (சி.ஆர்.ஐ.டி.பி.) | | | |
| 8 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாநில நெடுஞ்சாலைகள்–JI | 115732.00 | 102716.30 | 165000.00 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | |
| 9 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாவட்ட முக்கிய சாலைகள் –JT | 80916.00 | 69649.70 | 110000.00 |
| 10 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாவட்ட இதர சாலைகள் –JU | 148875.00 | 111756.75 | 145000.00 |
| 11 | சி.ஆர்.ஐ.டி.பி. – சிறப்புக் கூறு திட்டம் –JC | 15420.00 | 9433.68 | 19700.00 |
| | **மொத்தம்** | **360943.00** | **293556.43** | **439700.00** |
| 12 | சி.ஆர்.ஐ.டி.பி. சாலையின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல்–KF | 72055.00 | 42798.30 | 55000.00 |
| 13 | சி.ஆர்.ஐ.டி.பி. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்–JN | 102638.00 | 102566.44 | 73777.00 |
| 14 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல்–JK | | | |
| | நிலம் | 29534.35 | 30763.38 | 17983.76 |
| 15 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல்–KC | | | |
| | (i) பணிகள் | 13377.93 | 6455.48 | 14976.33 |
| | (ii) நிலங்கள் | 36674.30 | 35082.48 | 14345.75 |
| | **மொத்தம்** – KC | **50052.23** | **41537.96** | **29322.08** |
| 16 | கட்டடங்கள் கட்டுதல்–KT | 0.01 | 17.00 | 0.01 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-23 |
|---|---|---|---|---|
| | | 2021-22 | | |
| 17 | மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டம்-KB | 96.86 | 96.43 | 0.01 |
| 18 | சாலை பாதுகாப்பிற்கான சிறப்புத்திட்டம்-KO | 10000.00 | 12464.48 | 23100.00 |
| 19 | மாநகர சாலைப் போக்குவரத்து மேம்பாட்டு பணிகள் -JD | 6508.59 | 9246.33 | 17906.76 |
| 20 | உயர்செறிவு உடைய சாலை வழித்தடம் -JE | 143.50 | 172.90 | 85.59 |
| 21 | சேலம் சந்திப்பு-ஏற்காடு சாலையில் மேம்பாலம் கட்டுதல்-JF | 0.01 | 300.00 | 0.01 |
| 22 | தொழிற்சாலைகளுக்கு செல்லும் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்-KH | 6014.42 | 2918.47 | 2854.11 |
| 23 | நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்-KI | 4192.01 | 4124.16 | 10000.01 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | |
| 24 | ஜப்பான் பன்னாட்டு வெளிமுகமை நிதியுதவியுடன் புதுவயல்–பழவேற்காடு சாலையை இடைவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்–TNIPP–II, Phase–2 –PB | 1627.03 | 483.75 | 2000.00 |
| 25 | சென்னை மாநகரில் உள்ள முக்கிய ஆரச்சாலைகளை மேம்படுத்துதல்–JP | 0.01 | 0.00 | 0.01 |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு–மொத்தம்** | **645182.04** | **543668.94** | **672806.38** |
| 26 | வளர்ந்து வரும் தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள முக்கிய சாலைகளை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மூலம் மேம்படுத்துதல்–JJ | | | |
| | அ)பணிகள் | 3791.71 | 600.00 | 4312.85 |
| | ஆ)நிலங்கள் | 1.01 | 0.00 | 1.00 |
| | **மொத்தம்–JJ** | **3792.72** | **600.00** | **4313.85** |
| 27 | தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் மதுரை வட்ட சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல்– –JM | | | |
| | அ) பணிகள் | 0.00 | 2915.52 | 0.70 |
| | ஆ) நிலங்கள் | 0.00 | 265.57 | 0.00 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | |
| | மொத்தம்–JM | **0.00** | **3181.09** | **0.70** |
| | **தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்–மொத்தம்** | **3792.72** | **3781.09** | **4314.55** |
| 28 | சென்னை வெளிவட்ட சாலை–(கட்டம் 1)–JK | | | |
| | அ) பணிகள் | 16985.82 | 16999.16 | 12675.80 |
| | ஆ) நிலங்கள் | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **16985.83** | **16999.16** | **12675.81** |
| 29 | சென்னை வெளிவட்ட சாலை–(கட்டம் 2)–KI | | | |
| | அ) பணிகள் | 19227.06 | 28924.52 | 24308.46 |
| | ஆ) நிலங்கள் | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **19227.07** | **28924.52** | **24308.47** |
| 30 | JICA நிதியுதவியுடன் TNIPP கட்டம் –2ல் இராஜிவ் காந்தி சாலையில் கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலைகள்–PA | 0.01 | 0.00 | 0.00 |
| 31 | சென்னை மாநகரில் உள்ள தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலை மேம்பாட்டுப்பணி –JX | 4000.00 | 4000.00 | 4813.00 |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் – மொத்தம்** | **40212.91** | **49923.68** | **41797.28** |
| 32 | வடக்கு துறைமுகம் அணுகு சாலை மேம்பாட்டுத்திட்டம்–KN | | | |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-23 |
|---|---|---|---|---|
| | | 2021-22 | | |
| | அ) பணிகள் | 0.00 | 0.00 | 0.00 |
| | ஆ) நிலங்கள் | 10000.00 | 10000.00 | 24850.00 |
| | **மொத்தம்-KN** | **10000.00** | **10000.00** | **24850.00** |
| 33 | JICA நிதியுதவியுடன் சென்னை எல்லை சாலை திட்டத்திற்கான நில எடுப்பு -PC | 70000.00 | 70000.00 | 50000.00 |
| 34 | JICA நிதியுதவியுடன் சென்னை எல்லை சாலை திட்டப் பணிகள்-KG | 60000.00 | 59990.53 | 90000.00 |
| 35 | AIIB மற்றும் OFID நிதியுதவியுடன் சென்னை எல்லை சாலை திட்டப்பணிகள் -JP | 45000.00 | 19790.00 | 85000.00 |
| | **சென்னை எல்லை சாலை திட்டம் - மொத்தம்** | **185000.00** | **159780.53** | **249850.00** |
| 36 | ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்-PB | | | |
| | அ) பணி | 64000.00 | 44000.00 | 120000.00 |
| | ஆ)நிலங்கள் | 44000.00 | 4000.00 | 10000.00 |
| | **சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்-மொத்தம்** | **108000.00** | **108000.00** | **130000.00** |
| | **திட்டம் மொத்தம்** | **982187.67** | **865154.24** | **1098768.21** |
| | **நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்** | | | |
| 37 | தமிழ்நாடு மாநில புத்தாக்க முன்முயற்சி நிதிகள் (TANII) 2017-18 JI மற்றும் JK | 0.02 | 0.00 | 0.00 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | |
| 38 | மேம்பட்ட தரவு சேகரிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் – JM | 16.08 | 5.06 | 13.82 |
| | **மொத்தம்** | **16.10** | **5.06** | **13.82** |
| | **நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு** | | | |
| 39 | நபார்டு நிதியுதவியுடன் பாலங்களை கட்டுதல் / சீரமைத்தல் –JZ | 39494.31 | 18944.05 | 51611.32 |
| 40 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் ஊரகச் சாலைகள் மேம்பாடு –JI | 0.02 | 0 | 0 |
| 41 | மாநில நிதியின் கீழ் பாலங்களை கட்டுதல் / சீரமைத்தல் –KJ | 3061.50 | 1041.27 | 1649.71 |
| 42 | ஆசிய வளர்ச்சி வங்கி கடன் உதவியுடன் கூடிய சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் பாலங்கள் கட்டுதல் – நெடுஞ்சாலைகள்–RN | 1.57 | 1.05 | 1.05 |
| 43 | புறவழிச்சாலைப்பணிகள் – KA | 20858.46 | 16669.48 | 11229.01 |
| 44 | ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகள் மேம்படுத்துதல்–KD | 210000.00 | 194926.70 | 103200.00 |
| | **மொத்தம்** | **273415.86** | **231582.55** | **167691.09** |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | |
| | **திட்டங்கள் அலகு** | | | |
| 45 | தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் கட்டுதல் – JJ | 31694.19 | 9994.95 | 14963.29 |
| 46 | போக்குவரத்து மேலாண்மைக்காக சென்னை பெருநகரப் பகுதிகளில் சாலை மேம்பாலங்கள் கட்டுதல் – JD | 0.03 | 11.64 | 200.01 |
| 47 | பாலங்கள் கட்டுதல்/ சீரமைத்தல் – JE | 8439.40 | 3431.18 | 5361.34 |
| 48 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் பாலங்கள் கட்டுதல் / சீரமைத்தல் மற்றும் சாலைகள் மேம்படுத்துதல் – JQ | 0.52 | 0.00 | 0.52 |
| 49 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்ட சாலைப் பணிகள் – JN | 4962.96 | 65.56 | 1963.10 |
| 50 | இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்களைக் கட்டுதல் – JT | 41952.53 | 13780.31 | 26804.17 |
| 51 | இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் –JG | 16516.09 | 5854.04 | 13231.33 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு 2021–22 | செலவினம் (மார்ச் 2022 வரை) 2021–22 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 |
|---|---|---|---|---|
| 52 | ஹட்கோ கடனுதவியுடன் பாலங்கள் கட்டுதல் (நில எடுப்பு தொகை) – JB | 0.01 | 0.00 | 0.01 |
| 53 | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) – புறவழிச்சாலைகள் அமைத்தல் –JO | 6505.02 | 633.17 | 12434.61 |
| 54 | உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைத்தல் – JJ | 45834.47 | 16605.38 | 64500.00 |
| | **மொத்தம்** | **155905.23** | **50376.23** | **139458.38** |
| | **பெருநகர அலகு** | | | |
| 55 | சென்னை மாநகரில் போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேம்படுத்துதல் – JW | 13419.18 | 32700.53 | 43483.99 |
| 56 | மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர்(பெருநகரம்) செயல்படுத்தும் பணிகள் – KJ | 8587.40 | 1526.28 | 2942.87 |
| 57 | சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் – சென்னை மாநகரில் போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேம்படுத்துதல் – JH | 602.79 | 375.15 | 59.77 |

121464

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-23 |
|---|---|---|---|---|
| | | 2021-22 | | |
| 58 | சென்னை மாநகர போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான திட்டத்தின் கீழ் பாலங்கள் மற்றும் சாலைகள் அமைத்தல் –JI | 33178.91 | 33160.68 | 39250.12 |
| | **மொத்தம்** | **55788.28** | **67762.64** | **85736.75** |
| | **தேசிய நெடுஞ்சாலைகள் அலகு** | | | |
| 59 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி – SA | 45800.00 | 30100.00 | 41500.00 |
| 60 | பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் (பராமரிப்பிற்காக ஒதுக்கப்படும் மாநில அரசின் நிதி) – JS | 230.00 | 248.64 | 176.73 |
| | **மொத்தம்** | **46030.00** | **30348.64** | **41676.73** |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II** | | | |
| 61 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–PC | 66300.29 | 65332.75 | 62696.92 |
| | **மொத்தம்** | **66300.29** | **65332.75** | **62696.92** |
| | **ஒட்டு மொத்தம்** | **1579643.42** | **1310562.11** | **1596041..89** |

## 1.2.2. திட்டப் பணிகளின் செயல்பாடு

2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட திட்டப் பணிகளின் விவரம் மற்றும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் அட்டவணை 6 இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6: திட்டப்பணிகளின்செயல்பாடு**

(பாலங்கள்/சிறு பாலங்கள் எண்ணிக்கையில், நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2021–22) | | இலக்குகள் (2022–23) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு** | | | | |
| 1 | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | | | | |
| | மாநில நெடுஞ்சாலைகள் | 0/73 | 313 | 0/35 | 350 |
| | மாவட்ட முக்கிய சாலைகள் | 5/85 | 457 | 3/104 | 266 |
| | மாவட்ட இதர சாலைகள் | 4/400 | 926 | 9/435 | 1274 |
| | மாவட்ட இதர சாலைகள் (சிறப்புக் கூறு திட்டம்) | 0/4 | 129 | 0/6 | 167 |
| | **மொத்தம்** | **9/562** | **1825** | **12/580** | **2057** |
| | சாலையின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல் | – | 1562 | – | 1800 |
| | **சாலை மற்றும் பாலங்கள்** | **9/562** | **3387** | **12/580** | **3857** |
| | **கட்டிடங்கள்** | **–** | **–** | **–** | **–** |
| | **சுனாமி மறுவாழ்வுத்திட்டம்** | **–** | **–** | **1** | **–** |
| | **நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு** | | | | |
| 2 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் பாலங்களை கட்டுதல்/ சீரமைத்தல் –JZ | 73 | – | 159 | – |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2021–22) | | இலக்குகள் (2022–23) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| 3 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் ஊரகச் சாலைகள் மேம்பாடு –JI | – | – | – | – |
| 4 | மாநில நிதியின் கீழ் பாலங்களை கட்டுதல் / சீரமைத்தல் –KJ | 2 | – | 3 | – |
| 5 | ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகள் மேம்படுத்துதல்–KD | – | 2140.84 | – | 345.20 |
| 6 | இரயில்வே திட்டப் பணிகள் | 1 | – | 4 | – |
| | **மொத்தம்** | **76** | **2140.84** | **166** | **345.20** |
| | **திட்டங்கள் அலகு** | | | | |
| 7 | தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்களும் சுரங்கப்பாதைகளும் கட்டுதல் – JJ | 6 | 0 | 8 | 0 |
| 8 | இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ்பாலங்களைக் கட்டுதல் – JT | 2 | 0 | 1 | 0 |
| 9 | பாலங்கள் கட்டுதல்/ சீரமைத்தல் – JE | 3 | 2.00 | 6 | 0 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2021–22) | | இலக்குகள் (2022–23) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| 10 | இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டுதல் –JG | 1 | 0 | 5 | 0 |
| 11 | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) – புற வழிச்சாலைகள் அமைத்தல் – JO | 0 | 0 | 0 | 8.90 |
| 12. | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) | | | | |
| | அ) மாநில நெடுஞ்சாலைகள் (JI–CRIDP) | 0 | 0 | 0 | 8.31 |
| | ஆ) மாவட்ட முக்கியச் சாலைகள் (JT–CRIDP) | 0 | 0 | 6 | 0 |
| | இ) இதர மாவட்டச் சாலைகள் (JU–CRIDP) | 0 | 0 | 6 | 0 |
| | **மொத்தம்** | **12** | **2.00** | **32** | **17.21** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2021–22) | | இலக்குகள் (2022–23) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| 13 | **சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்** | | | | |
| | அ) இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் | 0 | 0 | 2 | 0 |
| | ஆ) சாலை மேம்பாலங்கள் | 2 | 0 | 2 | 0 |
| | இ) ஆற்றுப் பாலங்கள் | 0 | 0 | 2 | 0 |
| | ஈ)நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலங்கள் | 0 | 0 | 1 | 0 |
| | உ) சாலைகள் | 0 | 0 | 0 | 4.64 |
| | **மொத்தம்** | **2** | **0** | **7** | **4.64** |
| | **தேசிய நெடுஞ்சாலை அலகு** | | | | |
| 14 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் | 4 | 47.57 | 1 | 19.15 |
| 15 | மாநிலங்களுக்கு இடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் | – | 17.90 | – | – |
| | **மொத்தம்** | **4** | **65.47** | **1** | **19.15** |
| | **சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்** | | | | |
| 16 | சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் | 278 | 73 | 374 | 210 |
| | **மொத்தம்** | **278** | **73** | **374** | **210** |

## 1.3. திட்டம் சாராப் பணிகளின் செயல்பாடு

### 1.3.1. நிதி செயல்பாடு

இத்திட்டத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகளுக்கு செலவிடப்பட்ட விவரம் மற்றும் 2022–23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் அட்டவணை 7 இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7: திட்டம் சாராப் பணிகள்–நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்**

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் (மார்ச் 2022 வரை) | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | 2021–22 | | 2022–23 |
| 1 | நகர்ப்புற தேசிய நெடுஞ்சாலைகள் | 281.94 | 281.94 | 281.94 |
| 2 | சென்னை மாநகரத்திலுள்ள முக்கிய சாலைகளின் பராமரிப்பு | 2940.00 | 2500.00 | 2500.00 |
| 3 | மாநில நெடுஞ்சாலைகள் | 15365.61 | 13799.35 | 14043.58 |
| 4 | மாவட்ட முக்கியச் சாலைகள் | 12546.53 | 11481.26 | 12613.54 |
| 5 | மாவட்ட இதர சாலைகள் | 44788.01 | 39333.89 | 44996.59 |
| 6 | கரும்புச் சாலைகள் | 2350.16 | 1966.97 | 2000.00 |
| 7 | நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைச் சாலைகளை மேம்படுத்துதல் | 151.71 | 100.00 | 100.00 |
| **மொத்தம்** | | **78423.96** | **69463.41** | **76535.65** |

### 1.3.2. பணிகளின் செயல்பாடு

2021–22 ஆம் ஆண்டில் பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகளின் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் நீளம் மற்றும் 2022–23 ஆம் ஆண்டிற்கான இலக்கு ஆகியவை அட்டவணை 8 இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 8: பராமரிப்பு/புதுப்பித்தல் பணிகள் – செயல்பாடுகள்**

(நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | அலகின் பெயர் | சாதனைகள் 2021–22 | இலக்குகள் 2022–23 |
|---|---|---|---|
| 1 | கட்டுமானம் மற்றும் பராமரிப்பு | 2434 | 2500 |

# 2. முக்கிய திட்டங்களின் கீழ் செயல்பாடு மற்றும் பிரதான பணிகளின் விவரம்

நெடுஞ்சாலைத்துறையின் 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.15796.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ரூ.13105.62 கோடி திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## 2.1. முக்கிய முன்னெடுப்புகள்

### 2.1.1. *முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத்திட்டம்*

2021–2022 வரவு செலவு தொடரின் போது, **மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் 2200 கி.மீ நீளமுள்ள முக்கிய மாநில நெடுஞ்சாலைகள் போக்குவரத்து செறிவின் அடிப்படையில், அடுத்த 10 ஆண்டுகளில் நான்கு வழித்தட சாலைகளாகவும், 6700 கி.மீ நீளமுள்ள சாலைகள் இரண்டு வழித்தட சாலைகளாகவும் "முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத்திட்டம்"** என்ற புதிய திட்டத்தின் கீழ் அகலப்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம்" மாவட்ட தலைமையிடங்கள் இணைப்பு, போக்குவரத்து செறிவு மற்றும் முக்கிய இணைப்புகளின் அடிப்படையில் பெருகிவரும் சாலை போக்குவரத்தை எதிர்கொள்ளும் பொருட்டு சாலையை அகலப்படுத்த ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னோடி திட்டம் ஆகும்.

தேசிய நெடுஞ்சாலைகள், தொழிற்சாலைப்பகுதிகள், துறைமுகங்கள், சுற்றுலா தலங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்களை இணைக்கும் வகையில் சாலை கட்டமைப்பானது உருவாக்கப்பட வேண்டும். மாநிலத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து பெருகி வரும் வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப இடைவழித் தடச்சாலைகளை இருவழித் தடங்களாக அகலப்படுத்துதல் அவசியமாகிறது.

சாலைகளை அகலப்படுத்துவதால் சாலையின் கொள்திறன், பயண நேரம் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து உறுதிசெய்யப்படுகிறது. மேலும் எரிபொருள் செலவு, வாகன தேய்மானம் மற்றும் வாகன இயக்க செலவு குறைவதுடன் சாலைப்பயனாளர்கள் திருப்தி அடைகின்றனர். போக்குவரத்து செறிவிற்கேற்ப வழித்தடங்களை அதிகரிக்கும் போது குறைந்த நேரத்தில் பயணம் மேற்கொள்வதால் சாலை உபயோகிப்பாளர்கள் திருப்தி அடைகின்றனர்.

2021–22 ஆம் ஆண்டில், போக்குவரத்து செறிவு மற்றும் சாலை இணைப்பின் அடிப்படையில் 255.02 கி.மீ நீளமுள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலைகள் ரூ.2123.64 கோடி செலவில் 4 வழித்தடச் சாலைகளாகவும், மாநில சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் உள்ள 639.10 கி.மீ நீள இடைவழித்தடச்சாலைகள் ரூ.865.35 கோடி செலவில் இருவழித்தடச் சாலைகளாகவும் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத்திட்டம் சி.ஆர்.ஐ.டி.பி திட்டத்தின் ஒரு அங்கமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.1.2. *தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக மேம்படுத்துதல்*

மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் தரைப்பாலங்கள் தண்ணீரில் மூழ்குவதால் போக்குவரத்து சில தடங்களில் பாதிக்கப்பட்டு கிராமங்களில் உள்ள சாலைகள் துண்டிக்கப்படுகின்றன. இதனால் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், சரக்கு போக்குவரத்தும் மற்றும் விளை பொருட்களை சந்தைப்படுத்துதலும் பாதிக்கப்படுகின்றன. பள்ளி செல்லும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

2021–2022 மானியக் கோரிக்கையின் போது, **1281 தரைப்பாலங்கள் உயர்மட்ட பாலங்களாக மேம்படுத்தப்படும்** என அறிவிக்கப்பட்டது. இந்நிதியாண்டில் மூன்று நாட்களுக்கும் மேலாக வெள்ளத்தில் மூழ்கும் தரைப்பாலங்கள் மற்றும் 30 மீட்டருக்கும் குறைவாக உள்ள 648 சிறிய தரைப்பாலங்கள் ரூ.551.23 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலங்களாக சி.ஆர்.ஐ.டி.பி திட்டம் 2021–2022–ன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள தரைப்பாலங்கள் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்படும்.

### 2.1.3. *நகர்ப்புற மேம்பாட்டுப்பணி*

நகரப்பகுதியினை அடையும் சாலைப் பகுதியில் நகர்ப்புற போக்குவரத்தும் நகரின் வழியே செல்லும் நெடுஞ்சாலைப் போக்குவரத்தும் கலந்து பன்முகத்தன்மை உடையதாகிறது. எனவே, சீரான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்ய சிறப்பு வகையான கவனம் செலுத்தப்பட வேண்டியதாகிறது.

நகர்ப்புற சாலையின் வகைப்பாடும் பண்பும் அச்சாலை நிறைவேற்ற வேண்டிய இயக்கம் மற்றும் அனுகுவசதி இவ்விரு பணிகளையும் பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டியதாகிறது. நகர்ப்புறங்களில் சில ஆண்டுகளாய் பெருகிவரும் விபத்தினை கருத்தில் கொள்ளும் போது சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெருகிறது.

2021 –2022 மானியக் கோரிக்கையின் போது, **நகர்ப்புற மேம்பாட்டினை கருத்தில் கொண்டு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தேவையான இடமிருப்பின், அச்சாலைகள் கடினபுருவங்களுடன் கூடிய நான்குவழித்தட சாலைகளாக அகலப்படுத்தப்படும்** என அறிவிக்கப்பட்டது.

நகர்ப்புற மேம்பாட்டினை கருத்தில் கொண்டு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தேவையான இடமிருப்பின் கடினபுருவங்களுடன் கூடிய நான்குவழித்தட சாலைகளாக அகலப்படுத்தப்பட உள்ளன. இடவசதி இல்லாத பகுதிகளில் நெடுஞ்சாலை எல்லைக்குட்பட்ட பகுதிவரை சாலைகள் அகலப்படுத்தப்பட உள்ளன. மேலும் மழைநீர் தேங்குவதை தடுப்பதற்காக நடைபாதைகளுடன் கூடிய வடிகால்கள் அமைக்கப்பட உள்ளன.

சி.ஆர்.ஐ.டி.பி திட்டத்தின் கீழ், 10% நிதி ஒதுக்கீடு நகர்ப்புற மேம்பாட்டுப்பணிகளுக்கு செலவிட அரசாணை அளிக்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில், சி.ஆர்.ஐ.டி.பி திட்டத்தின் கீழ் ரூ.412.69 கோடி செலவில் 96.27 கி.மீ நீளச்சாலைகளை மேம்படுத்தும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.2. மாநில நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.2.1. *ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்* (CRIDP)

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு அரசின் முதன்மைத் திட்டமாகும். இதன் மூலம் பெரும்பான்மையான சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தில் வாகன கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் உறுதிப்படுத்தும் பணிகள் மூலம் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, அதிகரித்துவரும் வாகன போக்குவரத்திற்கு ஏற்ப சீரான மற்றும் பாதுகாப்பான சாலைகள் மேம்பட்ட சேவை நிலைகளுடன் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் 10 வருடத்திற்கான தொலைநோக்கு திட்டத்தை அடைய மேற்கொள்ளப்பட வேண்டிய சாலையின் சேவைத் தரம், நம்பகத்தன்மை மற்றும் நிலையான மீள்தன்மையை உறுதிப்படுத்தி பொருளாதார வளர்ச்சியை பலப்படுத்துவதற்கு இத்திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டு பணிகளான சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், சாலைகளின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள், உயர்மட்ட பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலை பாதுகாப்பு பணிகள் ஆகியவை முழுமையாகவும் ஒருங்கிணைந்த முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

#### *2.2.1.1. ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் – மாநில நெடுஞ்சாலைகள்*

2021–22 ஆம் நிதி ஆண்டில் புதிய பணிகளாக, 362.32 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 35 பாலங்கள்/சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ஆகியவை ரூ.675.69 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

நிலுவைப்பணிகளாக, 398.94 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 82 பாலங்கள்/சிறுபாலங்கள் அமைக்கும்

பணிகள் ஆகியவை ரூ.1573.59 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் 313 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 73 பாலங்கள் / சிறுபாலங்கள் அமைக்கும் பணிகளும் ரூ.1027.16 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

முள்ளுவாடி சாலையில் வசிஷ்டா நதியின் குறுக்கே கி.மீ.0/2–ல் உள்ள உயர் மட்ட பாலத்தினை திரும்ப கட்டுதல் பணி ரூ.9.58 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

### *2.2.1.2. ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட முக்கிய சாலைகள்*

2021–22ஆம் நிதிஆண்டில், 266.91 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 58 பாலங்கள்/சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ஆகியவை ரூ.326.16 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

நிலுவைப்பணிகளாக, 629.27 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 107 பாலங்கள்/சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ஆகியவை ரூ.1050.16 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில், 457 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும் 90 பாலங்கள் / சிறுபாலங்கள் அமைக்கும் பணிகளும் ரூ.696.50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில், சி.ஆர்.ஐ.டி.பி 2021–22–ன் கீழ், ரூ.19.00 கோடி மதிப்பில் வைகை ஆற்றின் குறுக்கே மேலக்கல்–பேரணை சாலை (MDR–262) கி.மீ.27/10–ல் மண்ணடிமங்கலத்திற்கும் மற்றும் சோழவந்தான் கருப்பட்டி சாலை கி.மீ.2/2–ல் இரும்பாடிக்கும் இடையில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

பவானி ஆற்றின் குறுக்கே புளியம்பட்டி – பவானிசாகர் – பண்ணாரி சாலையில் (MDR – 889) கி.மீ 17/10–ல் உள்ள பாலத்தை புனரமைக்கும் பணி ரூ.7.98 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

திட்டங்கள் அலகில், இந்த திட்டத்தின் கீழ், ரூ.48.67 கோடி மதிப்பிலான கீழ்க்கண்ட 5 ஆற்று பாலங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன,

1. கடலூர் மாவட்டத்தில், திட்டக்குடி – சிறுபாக்கம் சாலையில் கி.மீ.3/8ல் ரூ.11.85 கோடி மதிப்பில் வெலிங்டன் நீர்தேக்க உபரிநீர் செல்லும் வாய்க்காலின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.
2. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.8.07 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார் கோயில் சாலையில் (மா.மு.சா–603) கி.மீ. 4/10–ல் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.
3. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.9.64 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார் கோயில் சாலையில் (மா.மு.சா–603) கி.மீ.10/2–ல் அம்புலி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.
4. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.8.05 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார் கோயில் சாலையில் (மா.மு.சா–603) கி.மீ.10/6–ல் அம்புலி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.
5. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.11.06 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார் கோயில் சாலையில் (மா.மு.சா–603) கி.மீ.12/4–ல் மருதங்குடி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.

### *2.2.1.3. ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்*

2021–22 ஆம் நிதி ஆண்டில் புதிய பணிகளாக, 1133.61 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 159 பாலங்கள்/ சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ஆகியவை ரூ.1146.37 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

நிலுவைப்பணிகளாக, 1274.27 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 454 பாலங்கள்/சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ஆகியவை ரூ.1679.88 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில், 926 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 404 பாலங்கள் / சிறுபாலங்கள் அமைக்கும் பணிகளும் ரூ.1117.57 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் திட்டங்கள் அலகில், ரூ. 78.08 கோடி மதிப்பிலான கீழ்க்கண்ட 6 ஆற்று பாலங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிமேடு பேட்டை – மைலம் சாலை கி.மீ. 21/0–ல் பிரிந்து செல்லும் ஆலகிராமம் – தென்புத்தூர் கி.மீ. 5/4–ல் தொண்டி ஆற்றின் குறுக்கே ரூ.8.65 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி.

2. விழுப்புரம் மாவட்டத்தில் கடலூர் – சித்தூர் சாலையில் கி.மீ. 59/10–ல் பிரிந்து செல்லும் அருங்குறுக்கைச் சாலையில் கி.மீ. 5/0–ல் கெடிலம் ஆற்றின் குறுக்கே ரூ.10.05 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி.

3. மதுரை மாவட்டத்தில் மா.நெ.ந.100–ல் பரவை – மதுரை மேலக்கால் சாலையில் துவரிமான் ஆகிய கிராமங்களை இணைத்து ரூ.16.13 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி.

4. விழுப்புரம் மாவட்டம் மேட்டுப்பாளையம் கிராமத்தையும்–கடலூர் மாவட்டம் மேல்குமாரமங்கலம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.27.92 கோடி மதிப்பில் அமைக்கும் பணி.

5. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.9.29 கோடி மதிப்பில் பெருமகளூர் – அத்தாணி சாலையில் (இ.மா.சா) கி.மீ.6/8–ல் பாலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.

6. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.6.04 கோடி மதிப்பில் வல்லம் கள்ளபெரம்பூர் சாலையில் (இ.மா.சா) கி.மீ 4/6–ல் முதலமுத்துவாரி கால்வாயின் குறுக்கே ஓர் உயர்மட்ட பாலம் கட்டும் பணி.

### *2.2.1.4. ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்– சிறப்புக் கூறு திட்டம்*

2021–22ஆம் நிதி ஆண்டில், 140.39 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் ரூ.146.47 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

நிலுவைப்பணிகளாக, 167.39 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 6 பாலங்கள்/சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ரூ.183.00 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில், 129 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 4 பாலங்கள் / சிறுபாலங்கள் பணிகளும் ரூ.94.34 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

### *2.2.1.5. சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம் (IRQP)*

2021–22 ஆம் நிதி ஆண்டில் புதிய பணிகளாக, 2386.60 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் ரூ.768.91 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

நிலுவைப்பணிகளாக, 1805.66 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் ரூ.619.63 கோடி செலவில் செயலாக்காத்தில் உள்ளன.

இவற்றில், 1562 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.427.98 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

## 2.2.2. *விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகரப் பகுதிகள் மேம்பாடு*

விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகரப் பகுதிகளில், சாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 20 பணிகளுக்கு ரூ.367.31 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 10 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 10 பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

## 2.2.3. *சென்னையின் முக்கிய இணைப்பு சாலைகளை மேம்படுத்துதல்*

சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நகரமயமாதல் மற்றும் தொழிற்சாலைகள் வளர்ச்சி போன்றவற்றை கருத்தில் கொண்டு 40.25 கி.மீ நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த சி.ஆர்.ஐ.டி.பி 2020–21 திட்டத்தின் கீழ் முக்கிய

சாலைகள் இணைப்பு பகுதி–II மேம்பாட்டு திட்டத்தில் ரூ.165.06 கோடி மதிப்பில், ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தமுள்ள 9 பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.4. *சாலை பாதுகாப்புப் பணிகள்*

2021–22 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 401 எண்ணிக்கையிலான சாலை பாதுகாப்புப் பணிகளுக்கு ரூ.200.00 கோடி மதிப்பிலும் மற்றும் சாலைப்பாதுகாப்பு நிதியின் கீழ் 99 எண்ணிக்கையிலான சாலைப்பாதுகாப்பு பணிகளுக்கு ரூ.100 கோடி மதிப்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.2.5. *வெள்ள சீரமைப்புப் பணிகள்*

வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு, நிலுவைப்பணிகளான புதிய வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ரூ.352.41 கோடியில் எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

2021–22–ஆம் ஆண்டில், நிரந்தர வெள்ள சீரமைப்புப் பணிகளான கூடுதல் பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல், குழாய்பாலங்களை மாற்றுதல், வடிகால் அமைத்தல், சேதமடைந்த பாதுகாப்புப்பணிகளை புனரமைத்தல், மற்றும் இயந்திரங்கள், பம்ப்செட் மற்றும் ஜெனரேட்டர்கள் வாங்குதல் ஆகிய பணிகள் ரூ.392.16 கோடியில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### 2.2.6. உயர்மட்டச் சாலை வழித்தடம் மற்றும் மேம்பாலப் பணிகள்

நகரங்களில் அதிகரித்துவரும் போக்குவரத்து மற்றும் சாலைகளை அகலப்படுத்துவதற்கு போதுமான இடம் இல்லாததால் உயர்மட்ட சாலை மேம்பாலங்கள் தேவைப்படுகின்றன.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில், 2021–22 ஆம் ஆண்டில், கீழ்கண்ட இரு பணிகளுக்கு உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்க முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.2.80 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

1. திருச்சி மாநகரில், காந்திசிலை மற்றும் முத்தரையர் சிலை வழியாக திருச்சி நீதிமன்ற ரவுண்டானா
2. நெல்பேட்டை சந்திப்பு (அண்ணா சாலை) முதல் அவனியாபுரம் சந்திப்பு

மேலும், கீழ்க்கண்ட இடங்களில் உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. திருச்சி அண்ணா சிலை முதல் இரயில்வே சந்திப்பு வரை (5400 மீ)

2. மதுரை –தொண்டி சாலை கி.மீ. 0/0–1/8 அப்போலோ மருத்துவமனை சந்திப்பு (1800 மீ)
3. மதுரை–நத்தம் சாலை கி.மீ 0/0–1/8 (1800 மீ)
4. பெரியார் பேருந்து நிலையம் முதல் யானைக்கல் வரை வழி மீனாட்சி பசார் (2400 மீ)

சென்னை விமானநிலையம் முதல் சென்னை புறவழிச்சாலை வரை உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

திட்டங்கள் அலகில், கோயம்புத்தூர் நகரில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை அவினாசி சாலை கி.மீ.147/100 – 157/200 (மா.நெ.ந–52)–ல் உயர்மட்டச் சாலை வழித்தடம் கட்டும் பணி ரூ.1621.30 கோடி மதிப்பில் நடைப்பெற்று வருகிறது.

கீழ்க்காணும் மூன்று உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைக்கும் பணிகளுக்கு ரூ.4.33 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1. ஈரோடு – பெருந்துறை – காங்கேயம் சாலையில் கி.மீ. 2/0–7/4–ல் காளிங்கராயன் இல்லத்திலிருந்து திண்டல் மேடு வரை 5.40 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைத்தல்.

2. திருப்பூர் –பெருமாநல்லூர் – குன்னத்தூர் – பெருந்துறை சாலை (மா.நெ.196) கி.மீ. 0/0–6/2– ல் புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை மேம்பாலம் கட்டும் பணி.

3. திருச்சி மாநகரில் ஓடத்துறை காவிரி பாலம் முதல் (மாநகர மாநில நெடுஞ்சாலை –9–ல் கி.மீ. 316/4) அண்ணா சிலை மற்றும் கலைஞர் அறிவாலயம் வழியாக மல்லாட்சிபுரம் வரை (மாநகர மாநில நெடுஞ்சாலை – 153–ல் கி.மீ. 142/6) உயர்மட்ட சாலை வழித்தடம் அமைக்கும் பணி.

## 2.2.7. *சாலை மேம்பாலங்கள்*

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் நகரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. கால தாமதத்தைத் தவிர்க்கவும் சாலை சந்திப்புகளில் வாகன இயக்க செலவினங்களை குறைக்கவும் மற்றும் உள்ளூர் போக்குவரத்தை எளிதாக்கவும் முக்கிய நகரங்களில் உள்ள சாலைகளில் சாலை மேம்பாலங்கள் கட்டப்படுகின்றன.

கோயம்புத்தூர் நகரில் உக்கடம் ஆத்துப்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை மாநகரில் கோரிப்பாளையம் சாலை மேம்பாலம் அமைக்க நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

மதுரை– பாண்டிக்கோவில்– கப்பலூர் சாலை கி.மீ.18/4ல் (திருச்சி– அருப்புக்கோட்டை – தூத்துக்குடி சாலை சந்திப்பில் (தே.நெ–45B)) சாலை மேம்பாலம்

அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ரூ.28.77 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

திட்டங்கள் அலகில் கீழ்காணும் இரு சாலை மேம்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1. மதுரை – தனுஷ்கோடி சாலை கி.மீ .5/0 மற்றும் மதுரை சுற்றுச்சாலை கி.மீ 5/6 விரகனூர் சந்திப்பில் ரூ.43.00 இலட்சத்தில் பல்வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணி.

2. திருநெல்வேலி புறவழிச்சாலை கி.மீ 6/6–ல் (மா.நெ.75A) வீரமாணிக்கபுரம் அருகில் ரூ.56.00 இலட்சத்தில் பல்வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணி .

## 2.2.8. பராம*ரிப்பு / புதுப்பித்தல் பணிகள்*

பெருகி வரும் வாகனங்களும், போக்குவரத்து செறிவும் சாலை மேற்பரப்பினை பழுதடையச் செய்கின்றன. எனவே, தங்குதடையில்லாத எளிதான போக்குவரத்திற்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். சாலைகள் பராமரிப்பிற்காக ரூ.694.63 கோடி செலவிடப்பட்டு 2434 கி.மீ சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.2.9. மாநில நிதியின் கீழ் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்

இத்திட்டத்தின் கீழ், 2021–22 ஆம் ஆண்டில் நிலுவைப் பணிகளான 5 பாலப்பணிகள் ரூ.33.65 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 2 பாலப்பணிகள் முடிவுற்றன. இந்நிதியாண்டில் ரூ.10.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.2.10. மாநில நிதியின் கீழ் ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்

இத்திட்டத்தின் கீழ், 2021–22 ஆம் ஆண்டில், ரூ.2512.97 கோடி மதிப்பிலான 2486.04 கி.மீ. நீளமுடைய 1078 சாலைப்பணிகள், மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்த செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 2140.84 கி.மீ. நீளமுடைய 942 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் ரூ.1949.27 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.2.11. ஆற்றுப்பாலப் பணிகள்

கீழ்கண்ட ஆற்றுப்பாலப் பணிகள் திட்டங்கள் அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன:

1. தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவானைக்காவல் சாலை மற்றும் கல்லணை சாலையை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.90.96 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி.

2. திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டரை – இறையூர் சாலை கி.மீ.0/8–ல் செய்யாறு ஆற்றின் குறுக்கே ரூ.17.04 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி.

கீழ்கண்ட ஆற்றுப்பாலப் பணிகள் திட்டங்கள் அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.12.16 கோடி மதிப்பில், அய்யம்பேட்டை – கணபதி அக்ரஹாரம் சாலையில் கி.மீ. 0/4 –ல் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு பதிலாக உயர்மட்ட பாலம் திரும்ப கட்டும் பணி.

2. அரியலூர் மாவட்டத்தில் உள்ள கோட்டைக்காடு மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள பெண்ணாடம் கிராமங்களை இணைக்கும் வகையில் வெள்ளையாற்றின் குறுக்கே ரூ.11.51 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் திரும்ப கட்டும் பணி.

3. விழுப்புரம் மாவட்டத்தில், ரூ.16.51 கோடி மதிப்பில், விழுப்புரம்–காவணிப்பாக்கம் சாலையில் கி.மீ.6/10–7/2–ல் மலட்டாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டும் பணி.

4. விழுப்புரம் மாவட்டத்தில், ரூ.6.10 கோடி மதிப்பில், செஞ்சி–வடபாலை சாலையில் (மா.மு.சா.719) கி.மீ.7/2–ல் வராகநதியின் குறுக்கே பாலம் திரும்ப கட்டும் பணி.

5. திருவள்ளூர் மாவட்டத்தில், ரூ.18.57 கோடி மதிப்பில், திருத்தணி – நாகலாபுரம் சாலையில் (மா.மு.சா.719) கி.மீ. 11/7–ல் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே, உள்ள தாம்போகிக்கு மாற்றாக உயர்மட்ட பாலம் கட்டுதல் பணி.

6. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செய்யாற்றின் குறுக்கே உத்திரமேரூர் – காஞ்சிபுரம் சாலையில் கி.மீ.11/2–ல் ரூ. 21.56 கோடி மதிப்பில் உயர்மட்டபாலம் கட்டும் பணி.

## 2.2.12. *நில எடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்*

2021–22–ல், 3 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் 3 ஆற்றுப்பாலப் பணிகளுக்கு நில எடுப்பிற்காக ரூ.62.15 கோடி நிர்வாக ஒப்புதல் அரசினால் வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.2.13. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP)

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில் (CMDP), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) போக்குவரவு மற்றும் போக்குவரத்து (CTTS) ஆய்வு மற்றும் இரண்டாவது பெருந்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பிரதான திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தபட்டு வருகின்றன.

### *2.2.13.1. சாலை மேம்பாலங்கள்*

- கோயம்பேட்டில் சாலை மேம்பால பணி ரூ.93.50 கோடி மதிப்பிலும் வேளச்சேரி மேம்பாலம் அமைக்கும் பணியில் தரமணி இணைப்பு சாலை – வேளச்சேரி புறவழிச்சாலை பாலப்பகுதி ரூ.67.00 கோடி மதிப்பிலும் முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து விடப்பட்டுள்ளது.

- மேடவாக்கம் மேம்பால பணியில் தாம்பரம் – வேளச்சேரி பாலப்பகுதி ரூ.95.21 கோடி மதிப்பிலும், வேளச்சேரி மேம்பால பணியில் வேளச்சேரி புறவழிச்சாலை – தாம்பரம் பாலப்பகுதி ரூ.78.49 கோடி மதிப்பிலும் நடைபெற்று வருகிறது. விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவிடப்படும்.

- திருவான்மியூர் சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு, நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மத்திய கைலாஷ் சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.46.54 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கப்படும்.

- மவுண்ட்–பூந்தமல்லி – ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.314.48 கோடிக்கும் மற்றும் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு ரூ. 45.50 கோடிக்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, மெட்ரோ இரயில் பணியுடன் ஒருங்கிணைந்த பணியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- மேலும், 11 சாலை மேம்பாலப் பணிகள், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ளன. இவற்றில் 10 சாலை மேம்பாலப் பணிகளுக்கு நிலஎடுப்பு பணிகள் ரூ.983.32 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

### *2.2.13.2. ஆற்றுப்பாலங்கள்*

- திருவொற்றியூர் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே மற்றும் பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே, 2 ஆற்றுப்பாலப் பணிகள் ரூ.77.01 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

- நொளம்பூரில் கூவம் ஆற்றின் குறுக்கே ஆற்றுப்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.36.00 கோடி மதிப்பிற்கு நிலஎடுப்பு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

- பாடிக்குப்பத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே ஆற்றுப்பாலம் அமைக்கும் பணிக்கு நிலஎடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.2.13.3. புதிய இணைப்புச் சாலைகள் அமைத்தல்/ சாலைகளை அகலப்படுத்தும் பணிகள்*

- நீலாங்கரை, கிழக்கு கடற்கரை சாலையில் பாலவாக்கம் மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலையில் நெடுங்குன்றம் ஆகிய 3 இடங்களில் சாலைப் பணிகள் ரூ.72.54 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

- தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலையில் புத்தூர் பகுதி சாலைப்பணிக்கு, நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலைப்பணி விரைவில் துவங்கப்படும்.

- கொட்டிவாக்கம் பகுதியில் கிழக்கு கடற்கரை சாலையை ஆறுவழித்தடமாக அகலப்படுத்தும் பணிக்கு ரூ.17.16 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கப்படும்.

- மேற்சொன்ன 3 சாலைப்பணிகளில் மீதமுள்ள பகுதிகளுக்கு ரூ.995.50 கோடி மதிப்பில் நில எடுப்பு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

### *2.2.13.4. பாதசாரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் நடைமேம்பாலங்கள் மற்றும் நகரும் படிக்கட்டு நடைமேம்பாலம்*

- தாம்பரம் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையத்தை இணைக்கும் வகையில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்கும் பணியில், இரயில்வே நிலையத்தை இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திருமங்கலத்தில், கேந்திரிய வித்தியாலயா பள்ளி மற்றும் முகப்பேரில் DAV & வேலம்மாள் பள்ளி ஆகிய 2 இடங்களின் அருகே நடைமேம்பாலங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளை இணைக்கும் வகையில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்கு நிலஎடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.2.13.5. விரிவான சாத்திய கூறு அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ள பணிகள்*

- சென்னை பெருநகரின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை சீரமைப்பதற்காக 9 பணிகளுக்கு ரூ.1.96 கோடி மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இத்திட்டத்தின் கீழ் ரூ.677.63 கோடி 2021–22–ம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது

## 2.2.14. புறவழிச்சாலைகள்

புறவழிச்சாலைகள், போக்குவரத்தினை தங்கு தடையில்லாமல் செல்வதை உறுதி செய்வதுடன் நகர்ப்புற பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும் பயன்படுகிறது. மேலும், வாகன இயக்க செலவை குறைக்கவும் பயண நேரத்தை வெகுவாக குறைக்கவும் புறவழிச்சாலைகள் பயன்படுகின்றன.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில், திருத்தணி, இலுப்பூர் மற்றும் ராசிபுரம் பகுதி I – பாகம் II ஆகிய நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. திருத்துறைப்பூண்டி பகுதி–II, குன்னூர் மற்றும் பார்த்திபனூர் ஆகிய நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தநிலையில் உள்ளது. மேலும் 15 புறவழிச்சாலைகளுக்கு நில எடுப்பு பணிகள் ரூ.934.36 கோடி மதிப்பில் முன்னேற்றத்தில் உள்ளன.

2020–21 ஆம் ஆண்டில் R.K.பேட்டை, பள்ளிக்கொண்டா, மணச்சநல்லூர் பகுதி –II, மணப்பாறை, திருத்துறைப்பூண்டி பகுதி– II, நன்னிலம், அரியலூர் பகுதி–II மற்றும் சோளிங்கர் ஆகிய 8 புறவழிச்சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.2.45 கோடி மதிப்பில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியம் (TNIDB), மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஊட்டி நகருக்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2021–22 ஆம் ஆண்டில் அறந்தாங்கி, திருச்சி (அரைவட்டசாலை), ஆலங்குடி, கூடலூர், மயிலாடுதுறை, முசிறி, வெள்ளக்கோவில், திருப்பூர், காங்கேயம், பென்னாடம், செந்துறை, செங்கம், மேல்கச்சிராப்பட்டு–கீழ்கச்சிராப்பட்டு மற்றும் புதுவயல் ஆகிய 14 புறவழிச்சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.8.29 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகில், 12 முக்கிய நகரங்களில் புறவழிச்சாலை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி ரூ.192.12 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் பவானி புறவழிச்சாலைக்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்று, மீதமுள்ள 11 புறவழிச்சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கூத்தாநல்லூர் புறவழிச்சாலைக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்நிதியாண்டில் ரூ.166.69 கோடி செலவிடப்பட்டுள்ளது.

திட்டங்கள் அலகில், பொள்ளச்சி நகரத்திற்கு மேற்கு புறவழிச்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1. திருவள்ளூர் புறவழிச்சாலை, 2. உத்திரமேரூர் புறவழிச்சாலை, 3. சூளகிரி புறவழிச்சாலை, 4. துறையூர் புறவழிச்சாலை (கட்டம் 2), 5. இராசிபுரம் புறவழிச்சாலை (கட்டம் 2), 6. பொள்ளாச்சி நகருக்கு செட்டிபாளையம் வழியாக மாற்றுப்பாதை, 7. ஜலகண்டாபுரம் புறவழிச்சாலை, 8. போடிநாக்கனூர் புறவழிச்சாலை (கட்டம் 1), 9. கமுதி புறவழிச்சாலை, 10. சிவகங்கை புறவழிச்சாலை, 11. திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை மற்றும் 12. அருப்புக்கோட்டை மேற்கு புறவழிச்சாலை ஆகிய 12 புறவழிச்சாலை பணிகளுக்கு நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. கள்ளக்குறிச்சி புறவழிச்சாலை, 2. அவலூர்பேட்டை புறவழிச்சாலை, 3. பெரம்பலூர் புறவழிச்சாலை (கட்டம் 3), 4. பட்டுக்கோட்டை புறவழிச்சாலை (கட்டம் 3), 5. துறையூர் புறவழிச்சாலை (கட்டம் 3), 6. திட்டக்குடி புறவழிச்சாலை, 7. விருத்தாச்சலம் புறவழிச்சாலை (கட்டம் 2), 8. கோபிச்செட்டிபாளையம் புறவழிச்சாலை, 9. தருமபுரி புறவழிச்சாலை, 10. கெங்கவல்லி புறவழிச்சாலை, 11. காரமடை நகருக்கு கிழக்கே புறவழிச்சாலை, 12. காரமடை நகருக்கு மேற்கே புறவழிச்சாலை, 13. அவினாசி நகருக்கு வடக்கு புறவழிச்சாலை, 14. வத்தலகுண்டு புறவழிச்சாலை, 15. போடிநாக்கனூர் புறவழிச்சாலை (கட்டம்2), 16. சாத்தான்குளம் புறவழிச்சாலை மற்றும் 17. ஏழாயிரம்பண்ணை புறவழிச்சாலை ஆகிய 17 புறவழிச்சாலை பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## 2.2.15. TANII திட்டத்தின் கீழ் நடைபெறும் ஆராய்ச்சிப் பணிகள்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் 2017-2018 நிதியாண்டில் "வட்டச் சோதனை தடத்தின் உதவியுடன் நீண்ட காலம் தாங்கக்கூடிய சாலைக் கட்டுமானத்திற்கான தொழில்நுட்பம் குறித்த ஆய்வு" பணியானது தமிழ்நாடு மாநில

புத்தாக்க முன் முயற்சி நிதிகளின் கீழ் ரூ.199.34 இலட்சத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அட்டவணை 9: திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரம்:**

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதிஒதுக்கீடு | | | | | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 | மொத்தம் | |
| 1. | வட்டச் சோதனை தடத்தின் உதவியுடன் நீண்ட காலம் தாங்கக்கூடிய சாலைக் கட்டுமானத்திற்கான தொழில் நுட்பம் குறித்த ஆய்வு. | 9.89 | 120.02 | 30.94 | 38.49 | 199.34 | பணி நடைபெற்று வருகிறது. |
| **மொத்தம்** | | **9.89** | **120.02** | **30.94** | **38.49** | **199.34** | |

மேற்கண்ட ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.199.34 இலட்சத்திலிருந்து ரூ.199.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 2.3. ஒன்றிய அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.3.1. தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள்

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 6606 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில், 1511 கி.மீ. நீளமுள்ள சாலை மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலை அலகின் வாயிலாக, மேம்பாட்டுப் பணி/பராமரிப்புப் பணிகள், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் வழங்கப்படும் நிதியின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன. மீதமுள்ள 5095 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

#### *2.3.1.1. தேசிய நெடுஞ்சாலை திட்டப்பணிகள் (மூலப் பணிகள்)*

2021–22–ஆம் ஆண்டில், ரூ.2167.03 கோடி மதிப்பிலான 267.35 கி.மீ. நீளத்திற்கு 53 சாலைப் பணிகளும் மற்றும் 18 பாலப் பணிகளும் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்பணிகளில் 170.85 கிமீ நீளத்திற்கு சாலைப் பணிகளும் மற்றும் 3 பாலப்பணிகளும் தற்போது முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2021–22 நிதியாண்டில், ஒப்புதல் பெறப்பட்ட பணிகளில் 14.30 கி.மீ

நீளத்திற்கு சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 1150.89 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### *2.3.1.1.1.* சேதுபாரதம் திட்டம் – தேசிய நெடுஞ்சாலைகளில் இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அனைத்து இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலங்கள் / இரயில்வே கீழ்ப்பாலங்கள் அமைக்க ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் இலக்கு கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 6 இரயில்வே கடவுகளில் (கடவு எண். 17 – செக்கானூரணி (மதுரை), கடவு எண். 68 – தேனி (தேனி), கடவு எண். 85 – போடிநாயக்கனூர் (தேனி), கடவு எண். 109A – கண்ணமங்கலம் (வேலூர்), கடவு எண். 86 – எட்டிவாடி (திருவண்ணாமலை) மற்றும் கடவு எண். 503 – தென்காசி (தென்காசி)) ஆகிய இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக ரூ.402.70 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டும் பணியினை ஆண்டுத் திட்டத்தில் மேற்கொள்ள ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில், 5 இரயில்வே மேம்பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 1 பணிக்கான நிலஎடுப்பு முன்னேற்ற நிலையில் உள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

### *2.3.1.2. ஒன்றிய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள்*

#### *2.3.1.2.1. ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதித் திட்டம்*

2021–22–ஆம் ஆண்டில், ரூ.476.02 கோடி மதிப்பிலான 66.72 கி.மீ. நீளமுள்ள 15 சாலைப் பணிகள் மற்றும் 5 பாலப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில், 47.57 கி.மீ. நீளத்திற்கு 10 சாலைப் பணிகளும், 4 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021–22 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி திட்டத்தில் 102.93 கிமீ நீளமுள்ள 23 சாலைப் பணிகள் மற்றும் 24 பாலப் பணிகளுக்கான கருத்துரு ரூ.582.30 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

2021–22 நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.301.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022–23 நிதியாண்டில் நிதி நிலை அறிக்கையில் ரூ.415.00 கோடி ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி பணிகளுக்காக தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### *2.3.1.2.2. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்*

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் கிராம சாலைகளை மேம்படுத்தி, சாலை வசதி இல்லாத வாழ்விடங்களுக்கு சாலை இணைப்பை ஏற்படுத்தி வறுமை நிலையினை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. ஒன்றிய அரசு மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டத்தில் பராமரிப்பு பணிகளுக்கான நிதி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2021–22 நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.2.48 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022–23 நிதியாண்டில், நிதிநிலை அறிக்கை 2022–23–ல் ரூ.1.77 கோடி பராமரிப்பு பணிக்காக தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## *2.3.1.3. இதர செயல் திட்டங்கள்*

### *2.3.1.3.1.* **இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் வைப்பு நிதியின் கீழ் செயலாக்கத்திற்கு வழங்கப்பட்ட பணிகள்.**

கீழ்க்கண்ட பணிகள் வைப்பு நிதியின் கீழ் செயல்பாட்டில் உள்ளது.

**அட்டவணை 10: இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் செயலாக்கத்திற்கு வழங்கப்பட்ட பணிகள்**

| பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| தே.நெ.45–ல் வண்டலூர் முதல் செட்டிப்புண்ணியம் வரை உள்ள சாலையினை 4 வழித் தடத்திலிருந்து 8 வழித்தட சாலையாக அகலப்படுத்துதல். | 18.60 | 275.17 | 5.30 கி.மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. |
| தே.நெ.4–ல் மதுரவாயல் புறவழிச்சாலை முதல் ஸ்ரீபெரும்புதூர் சுங்கச் சாவடி வரை உள்ள சாலையினை 4 வழித் தடத்திலிருந்து 6 வழித் தட சாலையாக அகலப்படுத்துதல் | 23.20 | 428.95 | சிறுபாலப்பணிகள், சாலையோர வடிகால்வாய் மற்றும் அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. |

| பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலை 544 H தொப்பூர் – மேட்டூர் – பவானி – ஈரோடு சாலையை கடின புருவங்களுடன் கூடிய 2 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணி. | 76.75 | 183.47 | விரைவில் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் |

## 2.4. நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.4.1. அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்

இத்திட்டத்தின் கீழ், 2021–22 ஆம் நிதி ஆண்டில், ரூ.1108.13 கோடி மதிப்பீட்டில் 182 நிலுவைப் பாலப்பணிகள் மற்றும் புதிதாக ஒப்பளிக்கப்பட்ட 93 பாலப்பணிகள் ஆகியன எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றுள், 73 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் ரூ.189.44 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.5. இரயில்வே மேம்பாலம்/ கீழ்ப்பாலங்கள் அமைத்தல்

### 2.5.1. *இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து கடவுகளில் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்*

இரயில் வாகன அலகு (TVU) ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகும் இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டும் பணியானது 50:50 பணப்பகிர்வின் அடிப்படையில் இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இரயில்வே கடவுகள் அடிக்கடி மூடப்படுவதால் ஏற்படும் காத்திருப்பு நேரம், போக்குவரத்து நெரிசலைத் தவிர்பதற்காகவும், இரயில்வே கடவுகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காகவும் இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டப்படுகின்றன.

2021–22 ஆம் நிதி ஆண்டில், 89 இரயில்வே மேம்பாலம்/ கீழ்ப்பாலங்கள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

- 44 கட்டுமானப்பணிகள்

- 32 விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மற்றும் நில எடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்
- 13 நில எடுப்பு செய்ய மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்

89 பணிகளில் 44 பணிகளுக்கு கட்டுமான பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது, அவற்றில் 9 பணிகள் ரூ.287.47 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டன, 15 பணிகள் ரூ.505.94 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன, மீதமுள்ள 20 பணிகள் ரூ. 562.55 கோடி மதிப்பில் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 32 பணிகளில், 10 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்று ரூ.121.46 கோடி மதிப்பில் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 22 பணிகளுக்கு ரூ.272.16 கோடி மதிப்பில் நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்ட 13 பணிகளில் 2 பணிகளுக்கு ரூ. 0.43 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றது. மீதமுள்ள 11 பணிகளுக்கு ரூ.3.60 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021–22–ல், ஒரு இரயில்வே மேம்பாலப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ. 32 இலட்சம் நிர்வாக ஒப்புதல் அரசினால் வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.5.2. இரயில்வே கடவுகளில் அமையவுள்ள இரயில்வே மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள்

நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு மூலம், இரயில்வே கடவுகளுக்கு பதிலாக 10 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் ஒரு இரயில்வே கீழ் பாலம் ஆகியன ரூ.165.55 கோடி மதிப்பில், இரயில்வே பணித் திட்டத்தின் கீழ் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டன. இவற்றில் இந்நிதியாண்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் அண்ணனூரில் கடவு எண் 7 க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் ரூ.58.02 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 2.5.3. சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள்

- பெருங்களத்தூரில் இரயில்வே மேம்பாலம் மற்றும் குரோம்பேட்டை ராதா நகரில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை ஆகிய பணிகள் ரூ.263.36 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

- கடவு எண்: 14 வேப்பம்பட்டில் இரயில்வே மேம்பாலப்பணிக்கு, நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- திரிசூலத்தில் கடவு எண்: 22, திருவொற்றியூரில் கடவு எண்: 4 மற்றும் விம்கோ நகரில் கடவு எண்: 6 ஆகிய மூன்று இரயில்வே கீழ்பாலப் பணிகளில் இரயில்வே துறையின் பணிகள் முடிவடைந்த பின் நெடுஞ்சாலைப் பகுதி பணிகள் மேற்கொள்ளப்படும்.

- மீஞ்சூரில் கடவு எண்: 16–ல் இரயில்வே மேம்பால பணிக்கு, நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ஆவடியில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்தும் பணி மற்றும் அம்பத்தூரில் டி.ஐ சைக்கிள் தொழிற்சாலை அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி ஆகிய பணிகள், இரயில்வே திட்டப்பணிகளில் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது, இப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.6. பன்னாட்டு உதவி பெறும் திட்டங்கள்

### 2.6.1. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II (TNRSP–II)

தமிழகத்திலுள்ள அதிக வாகன நெருக்கடி மிகுந்த சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II உருவாக்கப்பட்டு, சாலை மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மேற்கொள்ள உலக வங்கியிடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டாலர் (மீளப்பட்ட தொகை ரூ.2122.90 கோடி) தொகைக்கான கடன் மற்றும் திட்ட ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### *2.6.1.1. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் சாலை*

பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் மூலம் எடுத்துகொள்ளப்பட்ட 535.346 கி.மீ நீளமுள்ள 16 தொகுப்புகளில், 427.967 கி.மீ நீளமுள்ள 10 தொகுப்புகள் முடிக்கப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இ.பி.சி 11 முதல் இ.பி.சி 16 வரை உள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

#### *2.6.1.2. பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்*

70.20 கி.மீ நீளமுள்ள ஒட்டன்சத்திரம் –தாராபுரம்– அவினாசிபாளையம் சாலை (மா.நெ. எண் 37) பிபிபி 02 முறையில் பணிகள் முடிக்கப்பட்டு, 2வது ஆண்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.6.1.3. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரிய (TNIDB) நிதி உதவியுடன்*

3319 கி.மீ நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்காக TNIDB மூலம் ரூ.132.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 987 கி.மீ நீளமுள்ள சாலைகளுக்கு, ஐந்து தொகுப்புகளாக, ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.6.1.4. நிலம் கையகப்படுத்துதல் (LA) மற்றும் மறுவாழ்வு மறு குடியமர்வு (R&R)*

தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் – 2001–ன் படி இத்திட்டத்திற்கென 177.19 ஹெக்டர் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்படுத்தப்பட்டு நிலங்களுக்கான இழப்பீடுகள், "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம் 2013" அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

மறு குடியமர்வு கட்டமைப்பின்படி, இத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள், நில உரிமை இல்லாதவர்கள், சாலையோர கடை நடத்துபவர்கள் உட்பட 5272 நபர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்கெனவும், திட்டத்தால் பாதிக்கப்பட்ட 298 பொதுவான சொத்துகளை மறுகட்டுமானம் செய்யவும் 31.03.2022 வரை மொத்தம் ரூ.53.17 கோடி வழங்கப்பட்டுள்ளன.

### *2.6.1.5. நிறுவன திறன் மேம்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு*

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –II இன் கீழ் நிறுவன திறன் மேம்பாட்டு மற்றும் சாலை பாதுகாப்பு கூறுகளில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- Electronics Corporation of Tamil Nadu (ELCOT) மூலம் தொகுதி 2 மற்றும் 3 க்கான கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் UPS கொள்முதல் பணிகள் முடிவு பெற்றது, தொகுதி 1 க்கான கொள்முதல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- காஞ்சிபுரம் தலைமை அரசு மருத்துவமனையில் விபத்து சிகிச்சை பிரிவுக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் பணிகள் நிறைவடைந்துள்ளன,
- காவல் துறைக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் பணிகள் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் முடிவு பெற்றது.

- மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பயனளிக்கும் வகையில் தீவிர விபத்து உயிர்காக்கும் சிகிச்சை பயிற்சி டி.என்.ஹெச்.எஸ்.பி மூலமாக அளிக்கப்பட்டது.

## 2.6.2. சென்னை கன்னியாகுமரி தொழிற்தட மேம்பாட் திட்டம் (CKICP)

கிழக்கு கடற்கரை பொருளாதாரதட திட்டத்தின் ஒரு பகுதியாக கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ள, சென்னை கன்னியாகுமரி தொழில்தடப் பயன்விளைப் பகுதியில் தொழிற்சாலை இணைப்புகளை உருவாக்கிட, ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் தமிழ்நாடு தொழிற்சாலைகள் இணைப்புத் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்ட செயலாக்கத்திற்காக சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட அலகு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சாலை விரிவாக்கம், நீண்டகால பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

### *2.6.2.1. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் மேம்பாடு மற்றும் பராமரித்தல்*

பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் மூலம் 589 கி.மீ நீளமுள்ள 16 மாநில சாலைகளை கடினப்புருவங்களுடன் கூடிய இருவழி/ நான்குவழிச்சாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளன. மொத்தமுள்ள 16 சாலை மேம்பாட்டுப் பணிகளில், 557.22 கி.மீ. நீளமுள்ள 15 சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீதமுள்ள 1 பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது,

இத்திட்டத்தில் அரக்கோணம் புறவழிச்சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதில் பாதிக்கப்பட்ட 41 பழங்குடி குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய குடியிருப்பு கட்டிடங்கள், அங்கன்வாடி, சமுதாய கூடம், கோயில், மேல்நிலை நீர்தேக்க தொட்டி, சிமென்ட் கான்கிரீட் நடைபாதை ஆகியவை அமைக்கப்பட உள்ளன. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### *2.6.2.2. நிலம் கையகப்படுத்துதல் (LA) மற்றும் மறுவாழ்வு மறு குடியமர்வு (R&R)*

நியாயமான இழப்பீடு, வெளிப்படையான நிலஎடுப்பு, மறுவாழ்வு, மறுகுடியமர்வு உரிமைகள் சட்டம் (RFCTLARR) சட்டம் 2013–இன் படியும், ஆசிய வளர்ச்சி வங்கியின் சமூக பாதுகாப்பு கொள்கையின் அடிப்படையிலும், நிலஎடுப்பு மற்றும் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான "மறுகுடியேற்ற திட்டம்" (RP) தயார் செய்யப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 348 கிராமங்களில் இருந்து சுமார் 438 ஹெக்டேர் தனியார் நிலம் தேவைப்படுகின்றது. இதில், 422 ஹெக்டேர்

கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதம் கையகப்படுத்த வேண்டிய பரப்பு தீர்வம் விசாரணை மற்றும் இறுதி தீர்வம் நிலையில் உள்ளது.

## 2.6.3. சென்னை எல்லைச் சாலை திட்டம்

சென்னை எல்லை சாலை திட்டமானது எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள பூஞ்சேரி சந்திப்பில் முடிவடைகிறது. **132.87 கி.மீ** நீளமுள்ள இச்சாலையானது, **5 பிரிவுகளாக** பிரிக்கப்பட்டு சுமார் **ரூ.13,812.82** கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது.

### *2.6.3.1. பிரிவு–1 (எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை)*

இத்திட்டத்தின் பிரிவு I–ற்கான (எண்ணூர் துறைமுகம் – தச்சூர்) **245.25 ஹெக்டேர்** நிலத்தினை **ரூ.951 கோடி** செலவில் கையகப்படுத்துவதற்காக அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேலும் இத்திட்டத்தின் பிரிவு I இன் கட்டுமான பணிகளுக்காக **ரூ. 2673.42 கோடி** நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்துள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்துடன் (JICA) **40074 மில்லியன்** ஜப்பான் யென்னிற்கு (**ரூ.2473.70 கோடி**) கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பிரிவு–I தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. நிலம் கையகப்படுத்துதல், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு மற்றும் கட்டுமான மேற்பார்வைக்கான ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

### *2.6.3.2. பிரிவு 2, 3 மற்றும் 5 (தச்சூர் முதல் மாமல்லபுரம் அருகில் பூஞ்சேரி வரை)*

சென்னை எல்லை சாலை திட்ட பிரிவு II, III மற்றும் V ஆகிய பிரிவுகளுக்கு 558.53 ஹெக்டேர் நிலத்தினை கையகப்படுத்துவதற்காக அரசு **ரூ.**2603.32 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளது மேலும் பிரிவு II மற்றும் III இன் கட்டுமானப் பணிக்காக அரசு **ரூ.4899.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

பிரிவு II மற்றும் III –னை செயல்படுத்த ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி அமைப்பு (OFID) ஆகியவை பிரிவு II & III ஐ செயல்படுத்த 478.07 **மில்லியன்**

**அமெரிக்க டாலர் (ரூ.3346.49 கோடி)** நிதி உதவிக்காக அணுகப்பட்டுள்ளன. இந்திய பொருளாதார விவாகாரத் துறை, புது தில்லி, இந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2022–23 நிதியாண்டின் முதல் காலாண்டில் கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரிவு II & III–ற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு உதவுவதற்காக நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் (LARR IC) ஆலோசகர்கள், நில எடுப்பு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செயல்முறையை மேற்பார்வையிடும் ஆலோசகர்கள் (LARR –MC), திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் (PMC) ஆகியோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுற்றுச்சூழல் மற்றும் சமூக வெளிப்புற கண்காணிப்பு ஆலோசகர்களை நியமிப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிரிவு II–ற்கான கட்டுமான மேற்பார்வை ஆலோசகர்கள் (CSC) நியமிக்கப்பட்டுள்ளனர். பிரிவு III–ற்கான கட்டுமான மேற்பார்வை ஆலோசகர்கள் நியமிப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிரிவு II–ற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 2 தொகுப்புகளாக (EPC–01 & EPC–02) கோரப்பட்டுள்ளது. இவற்றின் தற்போதைய நிலை பின்வருமாறு:

- **இ.பி.சி–01:** கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு பணிகள், ஜனவரி 2022 ல் துவங்கப்பட்டுள்ளது.
- **இ.பி.சி–02:**பணி ஆணை வழங்கும் வகையில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது மற்றும் 2022–23 நிதியாண்டின் முதல் காலாண்டில் கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

பிரிவு III–ற்கான கட்டுமான பணிகள் 3 இ.பி.சி தொகுப்புகளாக (EPC –03, EPC–04& EPC–05) செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றின் தற்போதைய நிலை பின்வருமாறு:

- **EPC –03 & 04**: ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடு நடந்து வருகிறது.
- **EPC–05:** ஒப்பந்த புள்ளி ஒப்புதல் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது. ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட உள்ளது.

மேலும், இத்திட்டத்தின் பிரிவு IV–ன் கட்டுமான பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது. **ரூ.584 கோடி** மதிப்பில் பிரிவு IV ஐ CPRR தரத்திற்கு மேம்படுத்தல் அரசின் பரிசீலனையில் உள்ளது பிரிவு II & III–க்காக ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் இம்மேம்படுத்தல் தொகையையும் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பிரிவு V–ன் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வெளி நிதி ஆதாரம் அடையாளம் காணப்பட வேண்டும்.

## 2.7. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

### 2.7.1. சென்னை வெளிவட்டச் சாலை

தே.நெ.32ல் வண்டலூர் தொடங்கி தே.நெ.16 மற்றும் தே.நெ. 716 வழியாக 60.15 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள சென்னை வெளிவட்டச் சாலை ரூ.2156.40 கோடி மதிப்பில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

19.01.2022 முதல் இச்சாலையில் உபயோகிப்பாளர் கட்டண வசூல் தொடங்கப்பட்டது.

### 2.7.2. சென்னை எல்லைச் சாலை கட்டம்–1 (வடக்கு துறைமுக இணைப்புச் சாலை)

சென்னை எண்ணூர் துறைமுகம் முதல் தே.நெ. 16–ல் தச்சூர் வரை மற்றும் சென்னை வெளிவட்டச்சாலையின் இணைப்புச் சாலை என மொத்தம் 25.40 கி.மீ. நீளமுள்ள சாலை சென்னை எல்லைச் சாலை கட்டம்–I என அறிவிக்கப்பட்டு JICA நிதியுதவியில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் இருபுறமும் ஆறு வழிப் பிரதான சாலை மற்றும் சாலையில் இருபுறமும் சேவைச் சாலை அமைக்கப்படுகிறது. மேலும் 8 பெரிய பாலங்கள், 7 சிறு பாலங்கள், 4 வாகனக் கடவுச் சாலை, 1 சாலை மேம்பாலம், 2 இரயில்வே மேம்பாலம், 4 கனரக வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவற்றையும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அறிவார்ந்த போக்குவரத்து முறையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட மொத்த மதிப்பீடு ரூ.3312.50 கோடியாகும்.

மேலும் நில எடுப்பு பணிகள் ரூ.951 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. 98 விழுக்காடு நில எடுப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கட்டுமான பணிகள் 27.01.2022 அன்று தொடங்கப்பட்டுள்ளன.

## 2.7.3. இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை

### *2.7.3.1. கட்டம்-1*

பழைய மாமல்லபுரம் சாலையில் சென்னை மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான 20.10 கி.மீ. நீளமுள்ள சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலையினை இணைக்கும் 2.15 கி.மீ. இணைப்புச் சாலையினை உள்ளடக்கியது, தகவல் தொழில் நுட்ப விரைவுச் சாலை என்பதாகும். இது ஒரு சுங்கச் சாலையாகும்.

இராஜீவ்காந்தி சாலையில் உள்ள பெருங்குடி, துரைப்பாக்கம், கலைஞர் கருணாநிதி சாலை மற்றும் மேடவாக்கம் சாலைகளில் உள்ள நான்கு சுங்கச்சாவடிகளில் உபயோகிப்பாளர் கட்டணம் வசூலிக்கப்படுவது 30.08.2021 முதல் நிறுத்தப்பட்டது. தற்போது நாவலூரில் உள்ள சுங்கச் சாவடியில் மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

### *2.7.3.2. கட்டம்-2*

சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையிலான, பழைய மாமல்லபுரம் சாலையை ஆறு வழித்தட சாலையாக அகலப்படுத்த தேவையான 13 கிராமங்களில் உள்ள 88.62 ஹெக்டேர் நிலங்களை கையகப்படுத்த ரூ.465.13 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுத் திட்டம்-II ன் கீழ் முதற்கட்டப் பணியாக கேளம்பாக்கம் (கி.மீ.4.675) மற்றும் திருப்போரூர் (கி.மீ.7.45) ஆகிய புற வழிச்சாலையை ரூ.243.70 கோடி மதிப்பீட்டில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 70 விழுக்காடு பணி முடிக்கப்பட்டுள்ளது. திருப்போரூர் புறவழிச்சாலை பணிகளை 2022 ஜூன் மாதத்திலும், கேளம்பாக்கம் புறவழிச்சாலை பணிகள் 2022 டிசம்பர் மாதத்திலும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.7.4. இராஜீவ் காந்தி சாலையில் இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் "U" வடிவ மேம்பாலம்

ரூபாய் 108.13 கோடி திட்ட மதிப்பிட்டில் இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் "U" வடிவ மேம்பாலம், ஈசிஆர் இணைப்பு பிரிவு சாலைகளில் ஒரு நடைமேம்பாலம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் மீது ஒரு பாலம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகிறது. 38 விழுக்காடு பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்திரா நகர் மேம்பாலம் பணிகள் மே 2022–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. டைடல் பார்க் மேம்பாலம் மற்றும் இதர பணியினை அக்டோபர் 2022–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.8. தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

### 2.8.1. ஒரகடம் தொழிற்பூங்கா சாலை திட்டம்

57.40 நீளச்சாலை முதற்கட்டமாக இருவழி/ இடைவழி தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக ரூ.612.82 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. பின்னர், II,III,IV&V கட்டங்களில் நான்கு வழிதடத்திலிருந்து ஆறு வழித்தடமாக ரூ. 593.56 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது நிறைவடையும் தருவாயில் உள்ளன.

இதுவரை ரூ. 1014.83 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 2.8.2. மதுரை சுற்றுச் சாலையை நான்கு வழித்தடமாக அமைத்தல்

மதுரை சுற்றுச் சாலை கி..மீ 0/0 முதல் 27/2 வரை இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்த ரூ.200.00 கோடிக்கு கட்டுதல், இயக்குதல் மற்றும் திரும்ப ஒப்படைத்தல் – சுங்கம் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டச் செலவில் ரூ.80 கோடி இடைவெளி நிதியாக(VGF) மாநில அரசால் வழங்கப்படுகிறது. இந்த ஒப்பந்த உடன்படிக்கை இரண்டு வருட கட்டுமான காலத்தையும் உட்சேர்த்து இருபது வருட காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ரூ.80.00 கோடி அரசு இடைவெளி நிதி (VGF), இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

### 2.8.3. செய்த பணிகள்

தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தில் 2021–22 ஆம் ஆண்டில் செய்த பணிகளின் மதிப்பு ரூ.40.81 கோடி ஆகும். மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

# II சிறு துறைமுகங்கள் அலகு

## 3. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு மாநிலம், இந்தியாவின் இரண்டாவது மிக நீண்ட கடற்கரைப் பகுதியான 1076 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்த கடற்கரையில், சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம் (எண்ணூர்), மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் (தூத்துக்குடி) ஆகிய மூன்று பெருந்துறைமுகங்களும், 17 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. பெருந்துறைமுகங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலும், சிறு துறைமுகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர், கடலூர் சிறு துறைமுக எல்லைகளுக்குள் கடல்சார் கட்டுமானங்களை நிறுவி, கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள பி.வி.சி. தொழிற்சாலைக்குத் தேவையான வினைல் குளோரைடு மோனோமர் எனும் மூலப்பொருளை இறக்குமதி செய்து வருகின்றனர்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் சமையல் எண்ணெய் நங்கூரமிட்ட கப்பல்களிலிருந்து மிதவைகள் மூலம் இறக்குமதி செய்யப்படுகிறது.

பாம்பன் துறைமுகத்தில் சிறு கலன்கள் கால்வாயை கடப்பதற்கு வழிகாட்டப்படுகின்றன. கன்னியாகுமரி மற்றும் இராமேசுவரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக குறைந்த அளவிலான தூரத்திற்கு படகுப்போக்குவரத்து நடைபெறுகிறது.

எண்ணூர் சிறுதுறைமுகத்தில் பன்முனை நங்கூர மிதவை அமைப்புகள் மூலம் திரவ அமோனியா இறக்குமதி செய்யப்படுகிறது.

காட்டுப்பள்ளி துறைமுகத்தில் இரும்பு, இயந்திரங்கள், கனிமங்கள், கிரானைட், பெட்ரோலியப்பொருட்கள், சரக்குப்பெட்டகங்கள் மற்றும் பல்வகைச் சரக்குகள் கையாளப்படுகின்றன. மேலும், கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பாகம் புனையும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருக்கடையூர் துறைமுகத்தில் தற்போது குழாய்கள் மூலம் இயற்கை எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

கூடங்குளம் துறைமுகத்தில் கூடங்குளம் அணுமின் உலைகள் 3,4,5 மற்றும் 6–க்கான இயந்திரங்கள் / பிரம்மாண்டமான தளவாடங்கள் கையாளப்படுகிறது.

## 3.1. சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விவரம்

**அட்டவணை 11: சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள்**

**(மெட்ரிக் டன்களில்)**

| வ. எண் | துறைமுகத்தின் பெயர்கள் | ஏற்றுமதி/ இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எண்ணூர் சிறு துறைமுகம் | இறக்குமதி | 10 | திரவ அமோனியா | 44,050 | 44,050 |
| 2. | காட்டுப்பள்ளி துறைமுகம் | இறக்குமதி | 29 | இரும்பு | 2,04,496 | 7,68,150 |
| | | | 12 | இயந்திரங்கள் | 933 | |
| | | | 1 | கனிமங்கள் | 33,000 | |
| | | | 24 | பெட்ரோலியப் பொருட்கள் | 3,82,172 | |
| | | | 7 | பல்வகைச் சரக்குகள் | 1,47,549 | |
| | | ஏற்றுமதி | 35 | இயந்திரங்கள் | 31,886 | 3,08,435 |
| | | | 21 | கிரானைட் | 2,65,765 | |
| | | | 3 | இரும்பு | 10,784 | |
| 3. | கடலூர் துறைமுகம் | இறக்குமதி | 40 | வினைல் குளோரைடு மோனாமர் | 3,02,582 | 3,02,589 |
| | | | – | இயந்திரங்கள் | 2 | |
| | | | – | பல்வகை சரக்குகள் | 5 | |
| | | ஏற்றுமதி | – | பெட்ரோலியப் பொருட்கள் | 51 | 1,701 |
| | | | – | பல்வகை சரக்குகள் | 1,641 | |
| | | | – | இயந்திரங்கள் | 9 | |
| 4. | நாகப்பட்டினம் துறைமுகம் | இறக்குமதி | 10 | சமையல் எண்ணெய் | 47,000 | 47,000 |
| | | ஏற்றுமதி | – | பெட்ரோலியப் பொருட்கள் | 7 | 47 |
| | | | – | பல்வகைச் சரக்குகள் | 40 | |
| 5. | திருக்கடையூர் துறைமுகம் | இறக்குமதி | – | இயற்கை எரிவாயு | 1,891 | 1,891 |
| 6. | கூடங்குளம் | இறக்குமதி | 2 | இயந்திரங்கள் | 1,278 | 1,278 |
| **மொத்தம்** | | **இறக்குமதி** | **135** | | **11,64,958** | **14,75,141** |
| | | **ஏற்றுமதி** | **59** | | **3,10,183** | |
| **பெருமொத்தம்** | | | **194** | | **14,75,141** | **14,75,141** |

**அட்டவணை 12: சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள்**

**(TEUs ல்)**

| வ. எண் | துறைமுகத்தின் பெயர் | ஏற்றுமதி/ இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள்/ பெட்டகங்கள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | காட்டுப்பள்ளி துறைமுகம் | இறக்குமதி | 341 | 20 அடி நிரப்பப் பட்டவை | 56,616 | 1,89,773 |
| | | | | 40 அடி நிரப்பப் பட்டவை | 1,11,730 | |
| | | | | 20 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 1,515 | |
| | | | | 40 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 19,912 | |
| | | ஏற்றுமதி | | 20 அடி நிரப்பப் பட்டவை | 65,909 | 2,43,365 |
| | | | | 40 அடி நிரப்பப் பட்டவை | 1,00,070 | |
| | | | | 20 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 19,096 | |
| | | | | 40 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 58,290 | |
| **மொத்தம்** | | **இறக்குமதி** | 341 | | **1,89,773** | **4,33,138** |
| | | **ஏற்றுமதி** | | | **2,43,365** | |
| **பெரு மொத்தம்** | | | 341 | | **4,33,138** | **4,33,138** |

## 3.2. பாம்பன் துறைமுகம்

இத்துறைமுகத்தில், பாம்பன் கால்வாயைக் கடந்து செல்லும் சிறுகலன்களுக்கு வழிகாட்டும் பணி செயல்பட்டுவருகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் 186 சிறுகலன்கள் இக்கால்வாயைக் கடந்து சென்றுள்ளன.

## 3.3. இராமேசுவரம் துறைமுகம்

இராமேசுவரம் துறைமுகத்தில் அக்னி தீர்த்தக்கரையில் பயணிகள் படகுப்போக்குவரத்து நடத்தப்பட்டு, 2021–2022 ஆம் ஆண்டில் 97,588 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

## 3.4. கன்னியாகுமரி துறைமுகம்

கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், பயணிகள் படகுப் போக்குவரத்தினை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினர் நடத்தி வருகின்றனர். 2021–2022 ஆம் ஆண்டில் 5,53,708 பயணிகள் பயணம் செய்துள்ளனர். தமிழ்நாடு கடல் சார் வாரியம் இப்படகு போக்குவரத்தினை மேற்பார்வையிடுவதுடன் நிர்வாக செலவினை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடமிருந்து வசூல் செய்கின்றது.

## 3.5. சரக்குப் போக்குவரத்து

2021–2022 ஆம் ஆண்டில் சிறுதுறைமுகங்கள் வாயிலாக 14,75,141 மெட்ரிக் டன் சரக்குகள் மற்றும் 4,33,138 (TEU – Twenty equivalent Unit ) சரக்குப் பெட்டகங்கள் ஆகியவை 535 கப்பல்கள் மூலம் கையாளப்பட்டுள்ளன.

# 4. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 11.04.1974 அன்று நிறுவனங்கள் சட்டம் 1956 இன் படி தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்திக்குத் தேவைப்படும் நிலக்கரியை எடுத்து வருவதற்காக நிறுவப்பட்டது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா, பாரதீப், தாம்ரா மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி எண்ணூர், காரைக்கால் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் இறக்கப்பட்டு வந்தது.

தற்பொழுது, இந்நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல்மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, வடசென்னை, வல்லூரில் அமைந்துள்ள அந்நிறுவனத்தின் 500 மெகாவாட் திறன் படைத்த மூன்று அலகுகளுக்குத் தேவையான இந்திய நிலக்கரி முழுவதையும் பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக எடுத்து வரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

இக்கழகம், குமரி முனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக படகுப் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகிறது. தற்பொழுது, ஒவ்வொன்றும் 150 இருக்கைகள் கொண்ட எம்.எல்,குகன், எம்,எல்.பொதிகை மற்றும் எம்.எல். விவேகானந்தா ஆகிய மூன்று படகுகளை 11.08.1984 முதல் இயக்கி வருகிறது.

வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களின் எண்ணிக்கை, சர்வதேச சந்தையில் கப்பல்களின் வாடகைக் கட்டணம் மற்றும் எடுத்து வரப்படும் நிலக்கரியின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து இக்கழகத்தின் செயல்திறன் மாறுபடும்.

## 4.1. கடந்த மூன்று ஆண்டுகளில் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் விவரங்கள்

கடந்த மூன்று ஆண்டுகளில் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 13: எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் விவரம்**

(இலட்சம் மெட்ரிக் டன்)

| வருடம் | நிலக்கரி ஏற்றும் துறை முகங்களில் வந்து சேர்ந்த நிலக்கரியின் அளவு | வாடகைக் கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு | சொந்தக் கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு | எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு | சாதனையின் அளவு |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 165.00 | 138.97 | - | 138.97 | 84.20% |
| 2020-21 | 164.00 | 92.90 | - | 92.90 | 56.60% |
| 2021-22 | 62.86 | 58.73 | - | 58.73 | 93.42% |

## 4.2. செயல்திறன்

2020-21 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் செயல்திறன் பின்வருமாறு:

**அட்டவணை 14: கப்பல்களின் செயல்திறன்**

| வாடகைக் கப்பல்கள் | 2020–21 | 2021–22 |
|---|---|---|
| வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை | 07 | 03 |
| பயண எண்ணிக்கை | 139 | 80 |
| பயணம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் சராசரி அளவு (மெட்ரிக் டன்) | 66838 | 73,438 |
| **எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு (இலட்சம் மெட்ரிக் டன்)** | **92.90** | **58.73** |

## 4.3. நிதிநிலை

கோவிட் – 19 முழுஊரடங்கு காலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என். டி. பி. சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனங்களுக்கு தேவையான நிலக்கரி கையாளும் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. பூம்புகார் கன்னியாக்குமரி படகு போக்குவரத்து சேவையின் மூலம் கிடைக்கப் பெறும் வருமானமும் பாதிக்கப்பட்டது. மேலும் கோவிட் – 19 முழுஊரடங்கு காலங்களில் அரசு உத்தரவின் பெயரில் படகு போக்குவரத்துச் சேவையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளில், கழகத்தின் மொத்த நிதி நிலை செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 15: நிதி நிலை விவரம்**

(ரூ. இலட்சத்தில்)

| வருடம் | மொத்த வருவாய் | நிகர இலாபம் | பங்கு ஈவுத்தொகை |
|---|---|---|---|
| 2019–20 | 65493.85 | 443.85 | 132.15 |
| 2020–21 | 26362.96 | –178.86 | – |
| 2021–22 | 29910.00 | – | – |

## 4.4. கன்னியாகுமரி படகுத்துறை

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான படகுத் துறையின் நிதிநிலை மற்றும் செயல்திறன் பின்வருமாறு:

**அட்டவணை 16: நிதிநிலை மற்றும் செயல்திறன் விவரம்**

| | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|
| இயக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை | 3 | 3 | 3 |
| பயணித்த பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 19.74 | 3.01 | 5.47 |
| கட்டண வசூல் (ரூபாய் இலட்சத்தில்) | 1234.03 | 158.01 | 313.47 |
| இயக்க லாபம் (ரூபாய் இலட்சத்தில்) | 193.41 | -276.73 | -179.63 |

**எ.வ.வேலு**
**பொதுப்பணிகள்,**
**நெடுஞ்சாலைகள் மற்றும்**
**சிறு துறைமுகங்கள் துறை**
**அமைச்சர்**